(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **139**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 சனவரி 09, திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ துமிந்த திசாநாயக்க,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. திசாநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ றிசாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன,** விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ முஹமட் நவவி**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ எஸ். பிரேமரத்ன**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ திலக் மாரபன**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷான் விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தார்:—

**I**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2016 திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி

**ஒதுக்கீட்டுச் சட்டமூலம்**

என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**II**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன அவர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2016 திசெம்பர் மாதம் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம் தொடர்பில் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டுவரப்படலாம்".

**III**

"பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பியல் நிசாந்த த சில்வா அவர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2016 யூன் மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம் தொடர்பில் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்துவதற்கான பிரேரணையொன்று கொண்டு வரப்படலாம்".

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) சபாநாயகர், இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2015 ஆம் நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளரின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்படுமாறும்** அச்சிடப்படுமாறும் கட்டளையாயிற்று.

(2) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை கடற்படையின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர், (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 164 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் (சைகைகள், சமிக்ஞைகள், அடையாளங்கள் மற்றும் வீதிக் குறியீடுகள்) தொடர்பாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 நவம்பர் 12 ஆம் திகதிய 1940/21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதிகளை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2012 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஐக்கிய நாடுகளின் ஒழுங்கு விதிகளைத் திருத்தி வெளிவிவகார அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 நவம்பர் 04 ஆம் திகதிய 1991/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்து மேற்படி ஒழுங்குவிதிகளை சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டு சர்வதேச தொழில் தாபனத்தினால் அதன் 104 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 204 ஆவது விதப்புரையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவக் கல்வித்துறை கேந்திர நிலையத்தை மருத்துவக் கல்வித் துறையொன்றாக தரம் உயர்த்தி விதிக்கப்பட்டு, 2016 நவம்பர் 03 ஆம் திகதிய 1991/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தில் நானோ விஞ்ஞான தொழில்நுட்பவியல் துறையை நிறுவுவது தொடர்பில் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 01 ஆம் திகதிய 1995/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை ருகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் உணர்வழிவியல் துறையை நிறுவுவது தொடர்பில் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 01 ஆம் திகதிய 1995/26ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, மேற்படிக் கட்டளைகளை கல்வி மற்றும் மனிதவள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 1987/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை.

(ii) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 நவம்பர் 10 ஆம் திகதிய 1992/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(iii) 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க காணி (பாராதீனப்படுத்தல் மீதான கட்டுப்பாடுகள்) சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என அடையாளம் காணப்பட்ட எம்.எஸ். அவிக் இன்டர்நெஷனல் ஹோட்டல்ஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு இறையிலி நில உடைமை அடிப்படையில் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணி கைமாற்றல் தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 நவம்பர் மாதம் 08 ஆம் திகதிய 1992/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை:

ஆகியவற்றைச் சமர்ப்பித்து, அக் கட்டளைகளை அரசாங்க நிதி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2014 ஆம் ஆண்டுக்கான தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கை: மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் செயலாற்று அறிக்கையும் ஆண்டுக் கணக்குகள்

ஆகிய அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை உற்பத்தி மற்றும் சேவைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2014 ஆம் ஆண்டுக்கான தலவாக்கலை இலங்கைத் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2014 ஆம் ஆண்டுக்கான இலங்கைத் தேயிலை சபையின் வருடாந்த அறிக்கை

ஆகிய அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை விவசாயம் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் யுக்ரேன் அரசாங்கத்திற்குமிடையே குற்றவியல் கருமங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் பற்றி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2016 நவம்பர் 11 ஆம் திகதிய 1992/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து மேற்படிக் கட்டளையை சட்டவிவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார் .

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2008, 2009, 2010, 2011, 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான கொலன்னாவ அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களத்தின் செயல்திறன் அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படிக் அறிக்கைகளை சுகாதாரம் மற்றும் மனித சேமநலம், சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(16) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,

(i) 2015 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கை: மற்றும்

(ii) 2015 ஆம் ஆண்டுக்கான ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் செயற்திறன் அறிக்கை

ஆகிய அறிக்கைகளைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை உற்பத்தி மற்றும் சேவைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறு பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. மனுக்கள்:**

(1) (i) மாத்தறை, இஸ்ஸதீன் நகர், மீரா வீதி, இல. 99 ஏ யில் வதியும் திருமதி எச்.கே.சீ. ஜயமாலியினது 2016.11.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) திருகோணமலை, சீனக் குடா, தான்யகம, இல. எப் 20 இல் வதியும் திரு, லஸந்த உடகெதரவினது 2016.11.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுசந்த புஞ்சிநிலெமே சமர்ப்பித்தார்.

(2) (i) படல்கம, பண்டாரநாயக்க மாவத்தை, இல. 70 இல் வதியும் திரு. பீ.ஏ.ஏ. விமலவீரவினது 2016.08.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) மாபோதல, மாபோதல வத்த, இல. 154 சீ/3 இல் வதியும் திரு. ஆர்.ஏ. மஹிந்த ரணபாகுவினது 2016.08.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) கலகெடிஹேன, சப்புகஸ்தென்னவத்த, இல. 139/ஏ/32 இல் வதியும் திருமதி எஸ்.ஏ. விஜிதா குமாரி வீரசூரியவினது 2016.08.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iv) வெயாங்கொட, நைவல, Y வத்த, இல. 36 இல் வதியும் திருமதி ரீ.ஏ. ஐராங்கனீயினது 2016.08.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜித ஹேரத் சமர்ப்பித்தார்.

(3) மாத்தறை, ராஹுல வீதி, இல. 22/52 இல் வதியும் திரு. அனுர விதாரணவினது 2016.11.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி சமர்ப்பித்தார்.

(4) (i) கலகெடிஹேன, சப்புகஸ்தென்ன, வனமல் உயன பங்களா, இல. 136/18பீ யில் வதியும் திருமதி கே. இனோகா நிசாந்தி பர்னாந்துவினது 2016.11.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) மாத்தறை, களஞ்சியசாலை வீதி, கித்துலெவெல வீதி, மாத்த/ மினெர்வா பௌத்த வித்தியாலயத்தில் பணிபுரியும் வண. வடகெதர ரேவத தேரரினது 2016.11.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

(5) (i) உலப்பனை, மாவெல வீதி, இல. 107 இல் வதியும் திரு. கே.ஜீ. கருணாரத்னவினது 2016.10.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பொரலஸ்கமுவ, திவுலபிட்டிய, கொவிகம் இடம், இல. 219/39 இல் வதியும் திரு. எம்.டி. சுகத்தபாலவினது 2016.11.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ஆனந்த அலுத்கமகே சமர்ப்பித்தார்.

(6) பலாங்கொட, உடஎல்லேபொல கலபிந்தபுதென, இல. 1/446 இல் வதியும் திருமதி ரீ.வீ. இந்திராணி சந்திரிக்காவினது 2016.11.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹேசான் விதானகே சமர்ப்பித்தார்.

(7) (i) காலி, பண்டாரநாயக்க இடம், இல. 181 இல் வதியும் திரு. குணபால விதாரணவினது 2016.11.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வலஸ்முல்ல, பொலிஸ் நிலையம், பொலிஸ் பரிசோதகர் எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.சீ. இந்திரஜித் த சில்வாவினது 2016.09.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**4. இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி** : பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர்,— இலங்கையில் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான தேசியக் கொள்கையையும் செயல்நுணுக்கத்தையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் அமுலாக்குவதற்காகவும்; நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையொன்றைத் தாபிப்பதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2017 சனவரி மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாவது முறையாக மதிப்பிடப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் அச்சட்டமூலம் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துமாறும் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சபாநாயகர் பின்வரும் அறிவித்தலை விடுத்தார்:—

"இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்தி சட்டமூலம் அரசியலமைப்பின் 154எ (5)(அ) ஆம் உறுப்புரைக்குட்பட்டிருப்பதாக சட்டத்துறை தலைமை அதிபதியினால் தெரிவிக்கப்பட்டுள்ளமையினால் 46அ(2)(அ) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் உரிய மாகாண சபைகளுக்கு மேற்படி சட்டமூலத்தை ஆற்றுப்படுத்தி அவ்வாறு ஆற்றுப்படுத்திய தினத்திலிருந்து ஒரு மாத கால எல்லையினுள் அச் சட்டமூலம் தொடர்பான கருத்துக்களை பெறும் பொருட்டு ஒவ்வொரு மாகாண சபைக்கும் சட்டமூலத்தின் பிரதிகளை அனுப்பிவைக்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுக்கின்றேன்."

**5. பாராளுமன்ற அமர்வு (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 7 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2017 சனவரி மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 25 ஆம் திகதி புதன்கிழமை, 26 ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய தினங்கள் சபை அமர்வு நாட்களாக இருக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அமர்வு (இல. 2)**: 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2016.03.08 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், 2017 சனவரி மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பாராளுமன்ற அமர்வு (இல. 3):** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது, 2017 சனவரி மாதம் 24 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 09.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு:** "இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் மு.ப. 10.40 மணிக்கு இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2017 சனவரி மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.